ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2396/20 - 2024 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2024.08.06

*2396/20 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 3/2021* (III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 54 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ட) என்னும் பந்தியின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினதும் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்ரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு
*2024, ஓகத்து 05.*

1A - PG 6804 — 364 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. விடயத்துக்கேற்ப, தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தைப் பதிவுசெய்வதன்மேல், தற்காலிகக் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர் மற்றும் அபிவிருத்தியாளர் விற்பனைக்கு முன்னரான எல்லா வரும்படிகளும் ஓர் உரிமம்பெற்ற வங்கியுடன் இயைபான கருத்திட்டத்தின் பாதுகாப்புக்காகப் பணம் கொடுத்துவைக்கப்படும் கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதனையும் கூட்டாட்சிக் கருத்திட்டத்தின் நிர்மாணத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கென அத்தகைய பாதுகாப்புக்காகப் பணம்கொடுத்துவைக்கப்படும் கணக்கைத் திறத்தல் வேண்டும்.

3. ஒரு கூட்டாட்சியாதனத்திலான, தற்காலிகக் கூட்டாட்சியாதனத்திலான அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்திலான பொது அம்சங்கள், புறநீங்கலாகக் குறிப்பிட்டவொரு சிறுகூறுக்கான அல்லது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினவான சிறுகூறுகளுக்கான அணுகுகைக்கும் துய்த்தலுக்குமாக இருக்கலாமென்பதுடன் விடயத்துக்கேற்ப, கூட்டாட்சி வரைபடத்தில், தற்காலிகக் கூட்டாட்சி வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடத்தில் அவசியமான எல்லைவரையறுத்தல் அதற்கிணங்கச் செய்யப்படுதலும் வேண்டும்.

4. கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பினுள் ஏதேனும் கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் தொடர்பில் கொழும்புக் காணிப்பதிவகத்தில் கூட்டாட்சி வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி வரைபடம் பதிவுசெய்யப்படுவதன்மேல், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்கவேண்டியதுமான முகாமைக் கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) நான்காம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான முகாமைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுவதன் மேல், ஒவ்வொரு முகாமைக் கூட்டுத்தாபனத்துக்காகவும் பேரவையொன்றிருத்தல் வேண்டும்; அப்பேரவை, முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஒரு செயலாளரையும், ஒரு பொருளாளரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் கூட்டமொன்றுக்கு, அத்தகைய கூட்டத்தில் சமுகமளிக்கும் பேரவை உறுப்பினர்களிலிருந்து அத்தகைய கூட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தவிசாளரொருவர் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) செயலாளர் அல்லது பொருளாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, பேரவையின் எஞ்சியுள்ள உறுப்பினர்கள், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பேரவையின் உடனடுத்துப் பின்வரும் கூட்டத்தில் பேரவையின் வேறோர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

6. முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயலாளரினது பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிக்குறிப்புக்களைத் தயாரித்தலும் பகிர்ந்தளித்தலும்;

(ஆ) பேரவையின் நிகழ்ச்சிக்குறிப்புக்களைத் தயாரித்தலும் பகிர்ந்தளித்தலும்;

(இ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பேரவையின் உறுப்பினர்களுக்கான அத்தகைய அறிவித்தல்களுட்பட, விடயத்துக்கேற்ப, முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பேரவையின் அடுத்த கூட்டத்தில் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பேரவையின் ஏதேனும் கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்புக்களின் உறுதிப்படுத்துகைக்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல்;

(ஈ) முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட தொடர்பாடல்களுக்குப் பதிலிறுத்தல்;

(உ) முகாமைக் கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் கூட்டங்களைக் கூட்டுதல்; அத்துடன்

(ஊ) முகாமைக் கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் எல்லா நிருவாக மற்றும் செயலகஞ்சார் கருமங்களை மேற்பார்வை செய்தல்.

7. முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பொருளாளரினது பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) முகாமைக் கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிபுகளின் நியதிகளின்படி கூட்டாட்சிச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய எவையேனும் உதவுதொகைகள் பற்றி அவர்களுக்கு அறிவித்தல்; அத்துடன்

(ஆ) முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தை ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிலான கணக்கொன்றில் பெறுதலும், ஒப்புக்கொள்ளுதலும், அதற்குக் கணக்குக்காட்டுதலும், அதனை வைப்பிலிடுதலும், தகுந்த கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுதலும், தேவைப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும்.

8. முகாமைக் கூட்டுத்தாபனம், பின்வரும் பதிவேடுகளைத் தகுந்தமுறையில் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டாட்சிச் சிறுகூறுகளின் தற்போதைய சொந்தக்காரர்களின் முறையான முகவரிகளுடனும் தொடர்பு விபரங்களுடனும் சேர்த்து அவர்களின் பெயர்கள்பற்றிய இடாப்பொன்று;

(ஆ) முகாமைக் கூட்டுத்தாபனம் மற்றும் பேரவை ஆகிய இரண்டினதும் கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்புக்கள்;

(இ) முகாமைக் கூட்டுத்தாபனம் மற்றும் பேரவை ஆகிய இரண்டினதும் பெறுகைகளும் செலவினமும் தொடர்பான கணக்கீட்டுப் பதிவேடுகள்;

(ஈ) முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல்கள்;

(உ) குறைந்தபட்சம் பத்தாண்டுக் காலப்பகுதிக்காக, முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத் தொடர்புகளின் பிரதிகள்; அத்துடன்

(ஊ) குறைந்தபட்சம் பத்தாண்டுக்காலப்பகுதிக்காக, முகாமைக் கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் கூட்டங்கள்பற்றிய அறிவித்தல்கள்.

9. (1) சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர் மற்றும் அபிவிருத்தியாளருட்பட்ட எவரேனுமாள், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், திறத்தவர்களிடையே உடன்பட்டுக்கொள்ளப்படவேண்டிய அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது கூட்டாட்சிச் சிறுகூறுகளின் தனிப்பட்ட சொந்தக்காரர்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவையும் வதிவிட நோக்கங்களுக்கானவையுமான சேவையளிக்கப்பட்ட இருப்பிடக்கூறுகளைத் தொழிற்படுத்தலாம்.

(2) அத்தகைய சேவையளிக்கப்பட்ட இருப்பிடக்கூறுகளின் தொழிற்பாடும் பேணுகையும் தொடர்பில் ஆணைக்குழு வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.

10. முகாமைக் கூட்டுத்தாபனம், இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 20ஏ என்னும் பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவாறாகக் கடனாழ் நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில்-

"இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் என்று பொருளாகும்;

"ஆணைக்குழு" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும்;

"அபிவிருத்தியாளர்" என்பது, இயைபான காணித்துண்டில் அபிவிருத்திச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட சொந்தக்காரர் அல்லது ஆள் என்று பொருளாகும்; அத்துடன்

"சேவையளிக்கப்பட்ட இருப்பிடக்கூறு" என்பது, குறுகியகால மற்றும் நீண்டகால இருப்பாட்சிக்காக வாழ்வசதிகளுடன் முழுமையாகத் தளபாடமிடப்பட்ட கூட்டாட்சிச் சிறுகூறு என்று பொருளாகும்.

EOG 08-0087

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.